K.N.GOVT ARTS COLLEGE (W) AUTONOMOUS, THANJAVUR – 7

II B.A - HISTORY SUB.CODE – 18K3H05

HISTORY OF INDIA FROM - 1707 TO 1857 CE

UNIT : III, IV, V

## மகாராஜா ரஞ்சித் சிங்

**ரஞ்சித் சிங்** 1780 முதல் 1839 வரையிலான காலத்தில் சீக்கிய பேரரசின் மன்னா ராக ஆட்சிசெய்து புகழ் பெற்றவர் ஆவார். 19 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் இந்தி யத் துணைக்கண்டத்தில் வட மேற்குப் பகுதியை இவர் ஆட்சி செய்தார். அவர் சிசுப் பருவத்தில் இருந்தபோதே பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டு தப் பிப்பிழைத்தார், ஆனால் அவரது இடது கண்ணின் பார்வையை இழந்தார். தனது 10 வயதில் இவர் தனது தந்தையாருடன் சேர்ந்து முதலாவது போரில் சண்டை யிட்டார். இவரது தந்தை இறந்தபின் ஆப்கானியர்களை வெளியேற்றுவதற்காக தனது இளம் பருவத்தில் பல போர்களில் ஈடுபட்டார். 21 வயதிலேயே பஞ்சாப் சிங்கம் எனவும் பஞ்சாபின் மகாராசா என்றும் இவர் அழைக்கப்பட்டார். அவரது தந்தை இறந்தபின் ஆப்கானியர்களை வெளி யேற்றுவதற்காக அவர் தனது இளம் பருவத்தில் பல போர்களில் ஈடுபட்டார்.1839 ஆம் ஆண்டில் இவருடைய தலை மையின் கீழ் பஞ்சாப் பகுதியில் இவரு டைய பேரரசு வளர்ச்சியடைந்தது.

ரஞ்சித் சிங்கின் எழுச்சிக்கு முன்னர் பஞ்சாபில் ஏராளமான போர்க்குணமிக்க குழுக் கள் இருந்தன, அவற்றில் பன்னிரெண்டு குழுக்கள் சீக்கிய ஆட்சியாளர்களின் கட்டுப் பாட்டிலும் ஓர் இசுலாமியக் குழுவும் இருந்தன. சீக்கியப் பேரரசை உருவாக் குவதற் காக ரஞ்சித் சிங் இச்சீக்கியக் குழுக்களையும் மற்ற உள்ளூர் அரசுக ளையும் கைப் பற்றி வெற்றிகரமாக ஒருங்கிணைத்தார்.

இசுலாமியப் படைகளின் படையெடுப்புகளை குறிப்பாக ஆப்கானிலிருந்து வந்த இசுலாமியப் படைகளை பலமுறை தோற்கடித்தார். பிரிட்டனுடன் நட்பான உறவு களை மேம்படுத்திக் கொண்டார். ரஞ்சித் சிங்கின் ஆட்சியில் பல்வேறு சீர்திருத்தங் கள், நவீனமயமாக்கல், உள்கட்டமைப்பில் முதலீடு மற்றும் பேரரசின் செழிப்புக்குத் தேவையான பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன . ரஞ்சித் சிங்கின் கல்சா இரா ணுவமும் அரசாங்கமும் சீக்கியர்கள், இந்துக்கள், இசுலா மியர்கள் மற்றும் ஐரோப்பி யர்கள் உள்ளிட்டவர்களால் உருவாக்கப் பட்டிருந்தது. சீக்கிய கலாச்சாரம் மற்றும் கலை மறுமலர்ச்சிக்கான காலப்பகுதி முதலானவை இவரது பரம்பரைச் சொத்தாக கருதப்படுகின்றன. சீக்கிய மக்களின் ஒரு முக்கிய கலாச்சார மையமான அமிர்த சரசிலுள்ள அரிமந்திர் சாகிப் எனப்படும் பொற் கோயில், இவரது ஆதரவில் உருவான பட்னா நகரிலுள்ள தாகிட் சிறீ பட்னா குருத்துவாரா, பீகார் மற்றும் மகாராட்டிர மாநில நாந்தேடு நகர அசூர் குருத் துவாரா உள்ளிட்ட முக்கிய குருத்து வாராக்களும் இவரது

காலத்தில் உருவான வையாகும். ரஞ்சித் சிங்கிற்குப் பின்னர் அவரது மகன் மகாராசா கராக் சிங் 1839 ஆம் ஆண்டு அரியணையைப் பிடித்து ஆட்சி செய்தார்.

## ஆரம்பகால வாழ்க்கை

மகாசிங் சுக்கெர்சாக்கியாவுக்கும், தற்போது பாக்கித்தானிலுள்ள குச்ரன்வாலாவின் சிந்து நகர மன்னர் கசபத் சிங்கின் மகளான ராச் கவுருக்கும் 1780 ஆம் ஆண்டு நவம்பர் 13 அன்று ரஞ்சித் சிங் பிறந்தார். போர்க்குணமிக்க சீக்கிய குரு கோபிந்த் சிங்கின் சீடராக இருந்த மூதாதையர் ஒருவரின் நினைவாக ரஞ்சித் சிங் பிறந்த போது அவருக்கு புத்த சிங் என்று பெயரிடப்பட்டது. இவரது வம்சாவளியினர் ரஞ்சித் சிங்கின் பிறப்புக்கு முன்னர் சுக்கர்சாகியா என்ற சீக்கிய சிற்றரசை உருவாக்கினர். முகலாயப் பேரரசு அழிந்து கொண்டிருந்த அந்நேரத்தில் வடமேற்கு தெற்காசியாவில் நிலைபெற்றிருந்த பல சிறிய சீக்கிய அரசுகளில் மிகவும் சக்திவாய்ந்த அரசாக இச்சிற்றரசு இருந்தது. இசுலாமியத் தலைவர் பீர் முகம்மது என்பவரின் மீதான போரில் வெற்றிபெற்றதை நினைவு கூறும் வகையில் குழந்தையின் பெயர் ரஞ்சித் (போர் வெற்றியாளர் என்ற பொருள்) என ரஞ்சித்தின் தந்தையாரால் மாற்றப்பட்டது

ரஞ்சித் சிங் குழந்தையாக இருந்தபோது பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டு இடது கண்ணில் பார்வையை இழந்தார். கம்பீரமான உருவத்திற்கு அப்பாற்பட் டவராக இருந்தார். பஞ்சாபி மொழியை எழுதுவதற்கு சீக்கியர்களும் இந்துக்களும் பெரிதும் பயன்படுத்தும் குர்முகி எழுத்துமுறையைத் தவிர்த்து பள்ளிக்கூடம் சென்று எழுதவோ படிக்கவொ இவர் கற்கவில்லை. இருப்பினும் வீட்டிலிருந்த படியே குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல் மற்றும் பிற போர்க்கலைகளைக் கற்றார்.

ரஞ்சித் சிங் 12 வயதில் இருந்தபோது அவரது தந்தை இறந்தார். பின்னர் அவர் தனது தந்தையின் சுக்கர்ச்சக்கியா சிற்றரசின் தோட்டங்களை மரபுவழியாகப் பெற்றார். மற்றும் அவரது தாயார் ராச் கவுரால் வளர்க்கப்பட்டார், இலக்பத் ராய் என்பவர் இவர்களுடன் சேர்ந்து தோட்டங்களை நிர்வகிப்பதில் உதவினார். ரஞ்சித் சிங் 13 வது வயதாக இருந்தபோது அசுமத் கான் என்பவர் மூலமாக அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. ஆனால் ரஞ்சித் சிங் அவ்வாலிபரைக் கொன்று வெற்றி பெற்றார் 18 வயதில் ரஞ்சித் சிங் இருந்தபோது அவரது தாயார் இறந்துவிட்டார் மற்றும் லக்பத் ராய் படுகொலை செய்யப்பட்டார், அதன்பிறகு அவரது முதல் திருமணத்திலிருந்து ரஞ்சித்தின் மாமியார் அவருக்கு உதவினார்.

பதின்வயதினராக இருந்தபோது ரஞ்சித் சிங் மது அருந்துவதை வழக்கமாகக் கொண்டார். அவரது தத்துவார்த்த வரலாற்றாளர்கள் மற்றும் அவரைப் பார் வையிட்ட ஐரோப்பியர்கள் ஆகியோரின் கூற்றுப்படி ரஞ்சித்தின் பிற்கால வாழ்க்கையில் இப்பழக்கம் மிகத் தீவிரமடைந்திருந்தது. இருப்பினும் அவர் மாட்டிறைச்சியை சாப்பிட்டதில்லை. புகைப்பிடிக்கும் பழக்கும் இவருக்கு இருந்ததில்லை. மற்றும் அவரின் அரசவையில் இருந்த அனைத்து அதிகா ரிகளும், அவர்களின் மதத்தைப்

பொருட்படுத்தாமல் வேலைக்கான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த கட்டுப்பாடுகள் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத் தினார்.

### அகால் தக்த் அளித்த தண்டணை

1802 ஆம் ஆண்டில் ரஞ்சித் சிங் மோரான் சர்கார் என்ற இசுலாமிய நாட்டியப் பெண் ணை மணந்தார். மகாராசாவின் இந்த நடவடிக்கையும் மற்ற சீக்கிய மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் ஆச்சாரமான சீக்கியர்களையும் நிகாங் குழுவினரையும் எரிச்சலைடையச் செய்தது. நிகாங்கு சீக்கியர்களின் தலைவராக இருந்த அகலி புலா சிங் சீக்கிய சமய அகால் தக்தின் புனிதப்பதவியில் இருந்தவர் ஆவார். ரஞ்சித் சிங் அம்ரித்சருக்கு வருகை தந்தபோது புனிதத் தலைவரைய வெளியில் அழைத்து தான் செய்த தவறுகளுக்காக அவரிடம் மன்னிப்பு கோரினார். அகலி புலா சிங் ரஞ்சித் சிங்கை அகால் தக்திற்கு முன்னால் இருந்த ஒரு புளிய மரத்தடிக்கு அழைத்துச் சென்று சாட்டையடி கொடுத்து அவரைத் தண்டிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண் டார். ரஞ்சித் சிங்கின் மன்னிப்பை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டார்களா என்பதை அக்லி புலா சிங் அருகிலுள்ள சீக்கிய பக்தர்களிடம் கேட்டார். பக்தர்கள் சத் சிறீ அகால் அருள் செய்து ரஞ்சித் சிங்கை விடுவித்து மன்னித்தனர்.

### இறப்பு

1830 களில் சிங்கிற்கு பல உடல்நல சிக்கல்கள் ஏற்பட்டன மதுபானம் மற்றும் . கல்லீரல் கோளாறு ஆகியவை இதற்குக் காரணமென சில வரலாற்று பதிவுகள் கூறுகின்றன . 1839 ஆம் ஆண்டு சூன் மாதம் 27 இல் ரஞ்சித்சிங் தூக்கத்தில் இறந்தார். அவரது நான்கு மனைவிகள் மற்றும் ஏழு காமக்கிழத்தியர்கள் ரஞ்சித் சிங்கின் இறுதி சடங்கு நடந்தபோது உடன்கட்டை ஏறினர்.

### இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி - 1857

**இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி, 1857** (*Indian Rebellion of 1857*) அல்லது **சிப்பாய்க் கலகம்** என்பது பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய்கள் மே 10, 1857 இல் இந்தியாவில் மீரட் என்ற நகரில் தொடங்கிய கிளர்ச்சியைக் குறிக்கும். இக்கிளர்ச்சி பின்னர் இந்தியாவின் பல இடங்களிலும், குறிப்பாக இந்தியாவின் மத்திய மலைப் பகுதிகளில், பரவியது. பொது மக்கள் பலரும் இக்கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண் டனர். முக்கிய கிளர்ச்சி இன்றைய உத்தரப் பிரதேசம், உத்தரகாண்டம், வடக்கு மத்தியப் பிரதேசம், டெல்லி, மற்றும் குர் காவுன் ஆகிய இடங்களை மைய மாகக் கொண்டி ருந்தது. கிளர்ச்சியாளர்கள் பிரித்தானியப் படையினருக்கு ஒரு பெரும் சவாலாக விளங்கினர். ஜூன் 20, 1858 இல் குவாலியர் நகரின் வீழ்ச்சியுடன் இது முடிவுக்கு வந்தது. இக்கிளர்ச்சி ""இந்தியாவின் முதலாவது விடுதலைப் போர்", அல்லது "சிப் பாய்க் கலகம்" எனவும் அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் வர்த்தக நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட பிரித்தானியரின் தொழில் மற்றும் தொழிற்சாலை பகுதிகளை நிருவகிக்க பிரித்தானிய கிழக்கு இந்திய கம்

பெனி நிறுவப்பட்டது. ஆனாலும் இதன் எல்லை மீறிய நடவடிக்கைகளாலும் இந் திய மன்னர்களிடையே ஒற்றுமையின்மையாலும் 1757 ல் **பிளாசி போரில்** பெற்ற வெற்றி யால் கிழக்கு இந்தியாவில் வங்காளம் வரை அதன் ஆட்சி பரவலாக்கப் பட்டது. பக்சர் போரில் முகலாய பேரரசர் ஷா அலாம் II தோற்றபின் 1764-ல் பீகாரும் கிழக்கிந்திய கம்பெனியால் கைப்பற்றப்பட்டது. இதன் காரணமாக வங்கம், பீகார் மற்றும் ஒரிசா மாநிலங்களில் வரி வசூல் செய்யும் உரிமை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனம் விரைவில் மும்பை, சென்னை போன்ற பகுதிகளில் தன்னை விரிவாக்கம் செய்தது.

**ஆங்கில-மைசூர்ப் போர்கள்** (1766–1799), **ஆங்கில-மராட்டியப் போர்கள்** (1772–1818), **கர் நாடகப் போர்கள்** ஆகியன பரந்த நர்மதா ஆற்றின் தெற்குப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வழிவகுத்தது. அதுவரை இச்செயல்க ளுக்கு பேரளவில் எதிர்ப்புகள் ஏதும் ஏற்படவில்லை. 1806-ல் தமிழ்நாட்டிலுள்ள வேலூர் சிறைச்சாலையில் இந்து மற்றும் இசுலாமிய சிப்பாய்களிடையே ஆங்கிலேயர் உருவாக்கிய சீருடை விதிமுறைகள் காரணமாகக் கிளர்ச்சி வெடித்தது. இதுவே முதன் முதலில் ஆங்கிலேயருக்கு எதிராக ஏற்பட்ட முதல் கிளர்ச்சியாகும்.

### பொருளாதார காரணங்கள்

1764 ஆம் ஆண்டு பக்சார் போருக்குப் பின் கிழக்கிந்திய வணிகக் குழு இந்தியா வில் ஒரு அரசியல் சக்தியாக எழுச்சியுற்றது. பின் வந்த காலங்களில் இந்தியாவின் வளங்கள் கம்பெனியின் வணிக முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தப்பட்டன. இந்தியர்களின் நலன்கள் பெரிதாக பொருட்படுத்தப்படவில்லை. செல்வச் சுரண்டல், இந்திய கைவினைத் தொழில்களின் நலிவு போன்றவை இந்தியாவில் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. தொழில் புரட்சியின் விளைவாக பிரிட்டன் தொழி லகங்களில் இயந்திரங்கள் அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட் டன. புதிதாக அறி முகமான இயந்திரங்களின் உதவியால் உற்பத்திப் பொருட்க ளும் அதிக அளவில் தயாரிக்கப்பட்டன. ஆங்கிலேயே வணிகர்கள் இவற்றை விற்பனை செய்யும் சந் தையாகவே இந்தியாவை பார்க்கத் தொடங்கினர். அதே நேரம் இந்தியாவில் கைவி னைஞர்களால் தயாரிக்கப்பட்ட இந்தியப் பொருட் களுக்கு பிரிட்டனில் அதிக வரிகள் விதிக்கப்பட்டன. எனவே இந்தியப் பொருட் களுக்கான தேவை சரிந்து இந்தியத் தொழில்கள் அழிவை நோக்கி சென்றன. இது தவிர ஆங்கிலேயர்கள் நிலவரி மக்கள் விருப்பத்திற்கு எதிராக அமைந்திருந்தன.

### உடனடிக் காரணங்கள்

அப்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட *என்பீல்டு* வகை துப்பாக்கிகள் உடனடிக் கார ணமாக அமைந்தன. அவ்வகை துப்பாக்கிகளுக்கு வழங்கப்பட்ட *தோட்டாக் கள்* ஒரு வகை உறையால் மூடப்பட்டிருந்தன. இவற்றை வாயால் கடித்து உறைகளை அகற்ற வேண்டியிருந்தது. இந்த உறைகள் மாட்டுக் கொழுப்பு மற்றும் பன்றிக் கொழுப்பினால் ஆனவை என்று தகவல் பரவியது. இது இந்து மற்றும் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ராணுவ வீரர்களின் சமய உணர்வை புண்படுத்துவதாக ராணுவ வீரர்கள் எண்ணினர்.

இதன் காரணமாக ராணுவ வீரர்கள் அவ்வகை உறைகளை வாயால் கடித்து நீக்க மறுத்து உயர் அதிகாரி களை எதிர்த்தனர். இதன் தொடர்ச்சியாக 1857 மார்ச் 29 ஆம் நாளில் மங்கல் பாண்டே என்ற ராணுவ வீரர் ஒருவர் பாரக்பூரில் தனது உயரதிகாரியை தாக்கி தன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இது ஆங்கிலேய ராணுவத்தில் பணி புரிந்த இந்திய வீரர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட ஒரு ஆரம் பமாக அமைந்தது.

**ஒழுங்குமுறை சட்டம் - 1773**

**ஒழுங்குமுறை சட்டம், 1773** (Regulating Act, 1773) இந்தியத்துணைக் கண்டத்தில் செயல்படும் கிழக்கிந்திய கம்பெனியின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், கட்டுப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும் ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமாகும். ஒழுங்கு முறை சட்ட விதிகள் கிழக்கிந்திய கம் பெனியின் நீதி மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்தாத காரணத்தினால், 1784 ஆம் ஆண்டு பிட்டின் இந்தியா சட்டம் நிறைவேற்றப்பட்டது.

- கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குனர்களின் பதவிக் காலம் ஓராண்டிலிருந்து நான்காண்டாக உயர்த்தப்பட்டது. அவர்களில் நான்கில் ஒரு பங்கினர் ஆண்டுதோறும் ஓய்வு பெறுவர்.

- பிரித்தானிய அரசிற்கு கம்பெனி ஆண்டு தோறும் 6% பங்கு ஈவுத்தொகை (dividend) வழங்க வேண்டும்.
- கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் உள்ளூர் மக்களிடம் வணிகம் செய்வதோ அல்லது பரிசுப் பொருட்கள் அல்லது கையூட்டு வாங்குவது தடை செய்யப்பட்டது.

- வங்காள இராஜதானியின் ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ், கிழக்கிந்திய கம்பெனியின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டதால், பம்பாய் மாகாணம் மற்றும் சென்னை மாகாணங்களின் ஆளுநர்கள் தனித்து இயங்காது, வங்காள ஆளுநரின் கீழ் செயல்பட்டனர்.[4]தலைமை ஆளுநர் பதவிக் காலம் ஐந்தாண்டுகள் ஆகும்.

- இச்சட்டம் கிழக்கிந்திய கம்பெனியின் மையப்படுத்தப்பட்ட அரசு நிறுவ காரணமாயிற்று. வங்காள ஆளுநருக்கு நீதி, நிர்வாகம், வணிகம் போன்ற துறைகளில் ஆலோசனை வழங்க நான்கு பேர் கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. நிர்வாகக் குழுவின் முடிவில் கருத்து வேறுபாடு இருப்பின் வாக்கெடுப்பின் மூலம் முடிவில் எடுக்கப்படும். இக்குழுவின் தலைவரான தலைமை ஆளுநருக்கும் ஒரு வாக்கு உண்டு.

- 1774ல் கல்கத்தா வில்லியம் கோட்டையில் உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்டது. கம்பெனி நிர்வாகத்தினரும் மற்றவர்களும் பிரித்தானிய நீதி முறைகளை

கடைப்பிடிக்கவும், வழக்குகளில் தீர்ப்பளிக்கவும், ஒரு தலைமை நீதிபதியும், மூன்று துணை நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர்.

**பிட் இந்தியா சட்டம்**

**பிட் இந்தியா சட்டம்** , **கிழக்கிந்திய நிறுவனச் சட்டம், 1784** என்பது பெரிய பிரித்தானிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்தால் 1784 இல் இயற்றப்பட்ட ஒரு சட்டம். இந்தியத் துணைகண்டத்தில் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி யையும் நடவடிக்கைகளையும் பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக இது இயற்றப்பட்டது. இச்சட்டம், இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பனியின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை கம்பனியும் பிரித்தானிய அரசும் கூட்டாக நிருவாகம் செய்ய ஒரு கட்டுப்பாட்டு வாரியத்தை அமைத்தது.

- 1773 இல் கிழக்கிந்திய நிறுவனம் தனக்கேற்பட்ட நிதிப்பற்றாக்குறையைப் போக்க பிரித்தானிய அரசின் உதவியை நாடியது. இந்தியாவிலிருந்த நிறுவன அதிகாரிகளிடையே ஊழல் மலிந்திருந்த காரணத்தால், நிதி உதவி செய்வதற்கு நிபந்தனையாக, நிறுவனச் செயல்பாடுகளை மேற்பார்வையிட ஒரு சட்டத்தை பிரித்தானிய அரசு ஏற்படுத்தியது. 1773 மேற்பார்வைச் சட்டம் (*Regulating Act of 1773*) என்றழைக்கப்பட்ட அச்சட்டம் தோல்வியடைந்தது. நிறுவனச் செயல்பா டுகளில் காணப்பட்ட முறைகேடுகளையும் ஊழலையும் அதனால் தடுக்க முடியவில்லை. இச்சட்டத்தின் குறைபாடுகளைத் தீர்க்க 1784 இல் பிரிட்டிஷ் பிரதமர் வில்லியம் பிட் 1784 இல் ஒரு புதிய சட்டத்தை இயற்றினார்.
- 1784 கிழக்கிந்திய நிறுவனச் சட்டத்தின் படி ஒரு நிருவாக வாரியம் உருவாக் கப்பட்டது. அது மொத்தம் ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்களில் இருவர் அரசினால் நியமிக்கப்பட்டனர். எஞ்சிய நாலு பேர் பிரிவி கவுன்சிலின் உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாரியத்தின் தலைவர், கிழக்கிந்திய நிறுவன விவகார அமைச்சர் போன்று செயல்பட்டார். நிறுவனத் தின் இராணுவ, குடிசார், வருவாய்சார் செயல்பாடுகள் அனைத்தும் இவ்வாரி யத்தின் கட்டுப்பாட்டில் வந்தன. மேலும் இச்சட்டம் நிறுவனத்தின் நிருவாகக் குழு உறுப்பினர் எண்ணிக்கையை மூன்றாகக் குறைத்தது . மும்பை மற் றும் சென்னை மாகாணங்களில் ஆளுனர்கள் தன்னிச்சையாகச் செயல்படும் உரிமையை இழந்தனர். கொல்கத்தா மாகாண ஆளுனரின் மேற்பார்வையில் செயல்படத் தொடங்கினர். கல்கத்தா இந்தியாவில் கிழக்கிந்திய நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளின் நிருவாகத் தலைநகராகச் செயல்படத் தொடங்கியது.

**ஆங்கிலேய கல்வி முறை**

- கிழக்கிந்திய வணிக்குழுவின் ஆட்சி, கல்வியைப் பொறுத்தவரை ஒருவித இரட்டை நிலைக்கொள்கையைப் பின்பற்றியது. நடைமுறையிலிருந்த கீழ்த் திசை கல்விமுறையை ஊக்குவிக்க மறுத்தது. மாறாக, ஆங்கில மொழிக்கும் மேலை நாட்டுக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்தது.

1813 ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கென அரசு ஆண்டுக்கு ஒரு லட்சம் ஒதுக்க வகை செய்தது. பிரிட்டிஷ் நாடாளுமன் றத்தில் இச்சட்டம் இயற்றப்பட்டபோதே இது குறித்து நீண்ட விவாதம் நடை பெற்றது. சட்டம் இயற்றப்பட்டு இருபது ஆண்டுகள் ஆகியும் இது குறித்த புதிய விவாதங்கள் தோன்றிக்கொண்டே இருந்தன. எனவே, கல்விக்கென அரசு சல்லிக்காசும் செலவிடவில்லை.

அக்காலத்தில் பிரிட்டிஷ் அறிஞர்கள் இந்தியாவில் கல்வி வளர்ச்சி குறித்து இருவேறு கருத்துக்களை கொண்டிருந்தனர்.

**மெக்காலே**

- கீழ்த்திசைவாதிகள் (ஓரியண்டலிஸ்ட்) என்றழைக்கப்பட்ட குழுவினர் இந்திய மொழிகளும் கீழ்த்திசை பாடங்களும் வளர்க்கப்பட வேண்டும் என வாதிட் டனர். மற்றொரு பிரிவினரான ஆங்கிலவாதிகள் (ஆங்கிலிசிஸ்ட்) மேலை நாட்டு அறிவியலும் இலக்கியமும் ஆங்கில மொழிவழி கற்பிக்கப்பட வேண் டும் என்று கூறினர்.

1829ல் தலைமை ஆளுநராக பதவியேற்ற வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியா வில் ஆங்கில மொழி வழிக்கல்வி வேண்டும் என வலியுறுத்தினார். 1835 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கல்விக் குழுவில் இடம் பெற்றிருந்த 10 உறுப்பினர் களும் இருவேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். குழுவின் தலைவர் மெக்காலே பிரபு உள்ளிட்ட ஐந்து பேரும் ஆங்கில மொழி வழிக்கல்வியை ஆதரித்தனர். எஞ்சிய ஐந்து பேர் கீழ்த்திசை மொழிகளுக்காக வாதாடினர். இந்த முட்டுக்கட்டை நிலை பிப்ரவரி 2ம் நாள் வரை தொடர்ந்தது. அன்று தான் குழுவின் தலைவரான மெக்காலே பிரபு ஆங்கில மொழி வழிக்கல் வியை ஆதரித்த தனது புகழ்பெற்ற குறிப்பை அறிவித்தார். பல்வேறு தரப்பி னரின் எதிர்ப்புகளையும் மீறி 1835 மார்ச் 7ஆம் நாள் பெண்டிங் பிரபு தீர்மா னத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இந்த தீர்மானத்தின் படி, இனி மேல் மேலை நாட்டு அறிவியல் மற்றும் இலக்கியங்களை ஆங்கில மொழி வழியில் பயிற்றுவிப்பதற்கே அரசு நிதி செலவிடப்படும் என்று அறிவிக் கப்பட்டது.

**டல்ஹவுசி பிரபு அவகாசியிலிக் கொள்கை**

**ஜேம்ஸ் ஆண்ட்ரூ பி ரெளன்-ராம்சே** என்ற இயற்பெயர் கொண்ட **டல்ஹவுசி பிரபு** ராம்சே பிரபு எனவும் ஏர்ல் ஆப் டல்ஹவுசி எனவும் அழைக்கப்பட்ட ஒரு **இசுக்காட்லாந்தியர்** ஆவார். இவர் **பிரித்தானிய இந்தியாவின்** காலனித்துவ நிர்வாகியாவார். டல்ஹவுசி 1848 இலிருந்து 1856 வரை இந்தியாவின் **இந்தியத் தலைமை ஆளுநராகப்** பணியாற்றினார். கிழக்கிந்தியக் கம்பெனியின் விதிகளுக்குப் புறம்பாக இந்தியாவில் நிர்வாகம் செய்து ஆங்கிலேய ஆட்சியை விரிவு செய்தவராவார். இவரது நிர்வாகத் திறமை, இவருக்குப் பின் இந்தியாவை ஆண்ட ஆளுநர்களுக்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்தது.

இவர் அறிமுகப்படுத்திய **அவகாசியிலிக் கொள்கையின்** படி, ஆண் வாரிசு இன்றி இறந்த இந்திய **இந்திய சுதேச மன்னர்க ளின்** இராச்சி யங்கள், **கிழக் கிந்தியக் கம்பெனியின்**நேரடி ஆட்சியில் இணைக்கப்ப்பட்டது. அவ்வாறு இணைக்கப்பட்ட இராச்சியங்களில் **தஞ்சாவூர் மராத்திய அரசு** ஒன்றாகும்.